**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தென் தமிழகத்தில் மேலும் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும்: வானிலை ஆய்வு மையம் தகவல்</u>**

தமிழகத்தில் பெய்து வரும் கனமழை மேலும் 2 நாள்களுக்கு தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கடந்த 2 நாள்களாக கன மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக அந்த பகுதிகளின் ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த மழை மேலும் 2 நாள்களுக்கு நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் இந்திய பெருங்கடலுக்கு அருகில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவிழந்துள்ளது. அதேவேளையில் அரபிக் கடலில் லட்சத் தீவுகளுக்கு அருகில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை சற்று இடம் மாறியுள்ளது. இதன் காரணமாக தென் மாவட்டங்களின் பல பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இந்த மழை மேலும் 2 நாள்களுக்கு நீடிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களில் சனிக்கிழமை கனமழை பெய்யும். தமிழகத்தின் பிற மாவட்டங்களில் ஆங்காங்கே மிதமான மழை பெய்யும். திருச்செந்தூரில் 190 மி.மீ. மழை: இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி தெருச்செந்தூர், சாத்தான் குளத்தில் 190 மி.மீ. மழையும், நான்குநேரியில் 170 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

ராதாபுரம் (140 மி.மீ.), பாபநாசம் (130 மி.மீ.), மனமேல்குடி (110 மி.மீ.), அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி, தூத்துக்குடி (90 மி.மீ.), நாகர்கோயில், மணிமுத்தாறு, கன்னியாகுமரி (80 மி.மீ.), ஸ்ரீவைகுண்டம், குளச்சல், பாளையங்கோட்டை (70 மி.மீ.), குழித்துறை (60 மி.மீ.), ராமநாதபுரம், தொண்டி (50 மி.மீ.) உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்துள்ளது.

## முழு கொள்ளளவில் தொடர்ந்து மஞ்சளாறு அணை

மஞ்சளாறு அணையில் கடந்த 36 நாள்களாக அணையின் முழு கொள்ளளவில் தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. மஞ்சளாறு அணை நீர்மட்டம், கடந்த அக்.16ஆம் தேதி முழு கொள்ளளவான 126.28 அடியை எட்டியது. தொடர்ந்து நவ.20ஆம் தேதி வரை அணையின் நீர்மட்டம் அப்படியே பராமரிக்கப்படுகிறது. அணைக்கு விநாடிக்கு 30 கன அடி வீதம் வரும் உபரிநீர், முழுமையாக வெளியேற்றப்படுகிறது. கடந்த அக்.16ஆம் தேதி முதல் தற்போது வரை அணையில் முழு கொள்ளளவான 100 மில்லியன் கன அடிக்கு தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது.

## நவ. 28-ல்விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 28-ம் தேதி காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் மேலும் தெரிவித்திருப்பது: இந்தக் கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்குத் திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது. மேலும், விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் கூட்டத்தில் தெரிவிக்கலாம். இதில், கருத்துகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை நவ. 28-

ம் தேதி காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இருவர் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர். மேலும், விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவுசெய்து ஒப்புதல் பெற்று, பின்னர் மனுக்களை அளிக்க வேண்டும்.

## <u>கொச்சியிலிருந்துதஞ்சைக்கு வந்த 1,320 டன் கூட்டு உரம்</u>

கேரளத்திலிருந்து தஞ்சாவூருக்கு வெள்ளிக்கிழமை 1,320 டன் கூட்டு உரம் வந்தது. கேரள மாநிலம், கொச்சி துறைமுகத்திலிருந்து 21 ரயில் வேகன்களில் கூட்டு உர மூட்டைகள் தஞ்சாவூர் ரயில் நிலையத்துக்கு வெள்ளிக்கிழமை காலை வந்தன. இந்த மூட்டைகள் தஞ்சாவூர், திருவாரூர், நாகை, அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் தனியார் உர விற்பனை மையங்களுக்கு லாரிகள் மூலம் ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டன.

## <u>நீர்வடிப் பகுதித் திட்ட அறிமுகக் கூட்டம்</u>

பெரியகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை சார்பில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்ட அறிமுகக் கூட்டம் ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு நீர்வடிப் பகுதி உதவி பொறியாளர் செல்லமுத்து, வேளாண்மை உதவி இயக்குநர் சுரேஷ் முன்னிலை வகித்தார். இதில் நீர்வடிப் பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள், மேலப்பரவு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## <u>விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் கண்டுபிடிப்புகள் அவசியம்</u>

விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விவசாயக் கண்டுபிடிப்புகள் அவசியம் என்று, கர்நாடக முதல்வர் சித்தராமையா

தெரிவித்தார். பெங்களூரு வேளாண் பல்கலைக்கழகம் சார்பில், பெங்களூரு விவசாய மையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் விருது வழங்கும் விழாவில் அவர் பேசியது: வேளாண் பல்கலைக்கழகங்கள் பட்டதாரிகளை உருவாக்குவதோடு, விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தற்போது தொழில் ரீதியாக கடும் போட்டிகளை எதிர்கொள்ளும் நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாயிகளுக்கு பயன் தரும் புதிய விதைகள், தொழில்நுட்பங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க வேண்டும். வேளாண் ஆராய்ச்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். விவசாயம் தவிர பட்டு வளர்ப்பு, தோட்டக்கலை போன்ற துணைத் தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் விவசாயிகள் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைவார்கள். நமது மாநிலத்தில் 70 சத நிலங்கள் நீர்ப்பாசனத்தை நம்பியுள்ளன. பெரும்பாலான விவசாயிகள் புன்செய் விவசாயத்தை நம்பியிருக்க வேண்டியுள்ளது. புன்செய் விவசாயத்தில் கர்நாடகம் 2-ஆவது இடத்தில் இருப்பது நல்லதல்ல. எனவே, புன்செய் விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், வேளாண்மை பாக்கியா திட்டத்திற்கு ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அதிகளவில் உணவுத் தானிய உற்பத்தியில் ஈடுபட வேண்டும். வேளாண் விளை நிலங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்குவதற்காக ஆண்டுதோறும் ரூ.10 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நிகழ் நிதியாண்டில், நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ.11,300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது என்றார் அவர். விழாவில் மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகௌடா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### புதிய அணை ஜனவரியில் துவக்கம்: அமைச்சர்

புதுடில்லி: மேகதாது பகுதியில் இரண்டு அணைகள் கட்டும் திட்டம் வரும் ஜனவரி மாதம் துவங்கும் என கர்நாடக மாநில நீர்வளத்துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறி யிருப்பதாவது: காவிரியில் இருந்து தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய 192 டி.எம்.சி தண்ணீரில் எவ்வித மாற்றம் செய்யப்பட வில்லை. அதே நேரத்தில் உபரிநீரை பயன்படுத்தும் வகையில் தான் மேகதாது பகுதியில் இரு அணைகள் கட்டப்பட உள்ளது. இத்திட்டம் குறித்து தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்கொள்ள கர்நாடகம் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் அணைகள் கட்டுவதற்கு டிசம்பர் மாதம் இறுதிவரையில் டெண்டர்கள் வரவேற்கப்பட உள்ள தாகவும், ஜனவரி மாதத்தின் 2-வது வாரத்தில் அணைகட்டும் பணி துவங்கும் எனவும் தெரிவித்தார். முன்னதாக அணைகள் கட்டுவதற்கு கர்நாடக மாநில வனத்துறை எதிர்ப்பு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### நாகப்பட்டினம் சுற்றுப்பகுதியில் பலத்த மழை

நாகப்பட்டினம்: நாகப்பட்டினம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

### இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு தரமான விதை பயன்படுத்த கோரிக்கை

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு, விவசாயிகள் தரமான விதைகளை பயன்படுத்த, வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, விதை பரிசோதனை

நிலைய வேளாண்மை அலுவலர் ஜெகதீசன் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், முதல் போக நெல் சாகுபடியில், அறுவடை செய்யும் பணிகள் நடந்து வருகிறது. தற்போது, இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு கிருஷ்ணகிரி அணையின் மூலம் பாசனம் பெறும் பகுதிகளில், நெல் நாற்றங்கால் தயார் செய்யும் பணி நடந்து வருகிறது. நெல் நாற்றுவிட, விவசாயிகள் தரமான நெல் விதைகளை பயன்படுத்த வேண்டும். விதை விபர அட்டையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை சரிபார்த்து விதைகளை வாங்க வேண்டும். கிருஷ்ணகிரி நகரில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை நிலையத்திற்கு, பணி விதை மாதிரிகள் அனுப்பி வைத்து, விதைகளின் தரத்தினை அறிந்து கொள்ளலாம். விதை பரிசோதனை நிலையத்தில் விவசாயிகள், ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக, 30 ரூபாய் செலுத்தி விதைகளின் தரத்தினை அறிந்து தரமான விதைகளை, நெல் நாற்று உற்பத்தி செய்ய பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## போன்சாய் மரத்தில் காய்த்த'மெகா சைஸ்' நாரத்தங்காய்

குன்னுார்:குன்னுார் காந்திபுரம் பகுதியில் போன்சாய் மரத்தில் மெகா சைசில்'வளர்ந்துள்ள நாரத்தங்காய் ஆச்சரியத்தை ஏற்படுத்தி யுள்ளது.நீலகிரி மாவட்டம், குன்னுார் காந்திபுரம் பகுதியை சேர்ந்தவர் வடிவேல்,47. கூலி தொழிலாளி. கடந்த ஆண்டு இவரது வீட்டின் அருகே நாரத்தங்காய் நாற்று வைத்துள்ளார். தற்போது, அந்த மரம் 'போன்சாய்' மரமாக வளர்ந்துள்ளது. தற்போது, இதில் 'மெகா சைஸ்' அளவில், 4 நாரத்தங்காய் காய்த்துள்ளது. இந்த ஒரு காய் ஒரு கிலோ முதல் 2 கிலோ வரை உள்ளது. இது இப்பகுதியை சேர்ந்த மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. எலுமிச்சை வகையை சார்ந்த இந்த காய் நீளமான வடிவங்களில் காணப்படுகிறது.இது தொடர்பாக வடிவேல் கூறுகையில், “முதன் முதலாக வந்துள்ள இந்த நாரத்தங்காயின் அளவு ஆச்சரியப்பட

வைத்தது. அனைவரும் வந்து பார்வையிட்டு செல்கின்றனர்," என்றார். தோட்டக்கலை துறையினர் கூறுகையில், 'போன்சாய் மரத்தில் வளர்ந்துள்ள நாரத்தங்காய் குறித்து அறிதோம். சில மரங்களில் இவ்வாறு வளர வாய்ப்புள்ளது. ஆனாலும் அரிதானது' என்றனர்.

## பருத்தி விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கல்

பெரம்பலூர்: இந்திய பருத்தி கழகம் சார்பில், பருத்தி விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி, புதுவேட்டக்குடி நடுநிலைப் பள்ளியில் நடந்தது. நிகழ்ச்சியில், இந்திய பருத்தி கழக மேலாளர் ஸ்ரீவஸ்தவா கலந்துகொண்டு, 250 விவசாயிகள் 25 பேருக்கு இடுபொருள்கள் வழங்கி, பேசியதாவது: இந்திய பருத்தி கழகம் சார்பில், இந்தாண்டு பருத்தியில் முதல்நிலை செயல் விளக்கத்துக்காக, மாவட்டத்தில், 250 பருத்தி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு ஏக்கருக்கு தேவையான பொட்டாசியம் உரம், ஆல் 18 உரம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக பருத்தி பிளஸ் ஆகிய இடுபொருள்கள் வழங்கப்படுகிறது. விவசாயிகள் பருத்தியில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். உரம் மற்றும் பூச்சிநோய் மருந்துகளை உரிய நேரத்தில், சரியான அளவு பயன்படுத்தினால் கூடுதல் மகசூல் பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். பேராசிரியர் ராஜேந்திரன், மானாவாரி பருத்தியில் உர மேலாண்மை மற்றும் வளர்ச்சி ஊக்கியின் முக்கியத்துவம் குறித்தும், பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் திவ்யா, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்தும் விளக்கம் அளித்தனர். இதில் முதுநிலை கொள்முதல் அலுவலர் வெங்கடாசலம், புதுவேட்டக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு செயலர் நல்லதம்பி உட்பட பலர் பங்கேற்றனர். அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) விஜயலட்சுமி நன்றி கூறினார்.

## பூச்சி தாக்குதலை சமாளிக்க... அஸ்திரம்:பருத்தி செடிக்கு அறிமுகம்

திண்டுக்கல்:பருத்தியை அதிகளவு சேதபடுத்தும் பூச்சிகளை ஒழிக்க புகையிலை மற்றும் காய்கறிகளை கொண்டு தயாரிக்கப்படும் "அக்னி அஸ்திரம்' என்ற இயற்கை முறை பூச்சிக்கொள்ளி கரைசல் விவசாயி களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காந்திகிராம பல்கலை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் கூறியதாவது: பருத்தி சாகுபடி துவங்கி விட்டதால் பூச்சிகளின் தாக்குதல் அதிகரிக்கும். இதனால் தரமான பஞ்சு கிடைப்பதில் சிக்கல் ஏற்படும். பூச்சிகளை ஒழிக்க இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட "அக்னி அஸ்திரம்' கரைசலை விவசாயிகள் பயன்படுத்தலாம். பூச்சிகள் செடிகளின் அருகில் வராமல் ஓடி ஒளிந்து கொள்ளும்."அக்னி அஸ்திரம்'பசையை தயார் செய்ய புகையிலை ஒரு கிலோவும், வேப்பஇலை 5 கிலோவும், பச்சை மிளகாய் 2 கிலோவும், பூண்டு ஒரு கிலோவும் சேர்த்து "பேஸ்ட்' மாதிரி அரைத்து எடுக்க வேண்டும். அதை 20 லிட்டர் மாட்டு கோமியத்துடன் கலந்துவைக்க வேண்டும். பிறகு நன்றாக கொதிக்க வைத்து 48 மணிநேரத்திற்கு பிறகு அதை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து நேரடியாக பருத்தி செடிகளில் தெளிக்க வேண்டும். விவசாயிகள் இதை முறைப்படி செய்தால் மகசூல் அதிகரிப்பதோடு தரமான பஞ்சினை பெற்று பயன் அடையலாம். பூச்சிகளும் அண்டாது,' என்றார்.

## கரும்பு விலை அதிகரிப்பு

திண்டுக்கல்:பொங்கலை முன்னிட்டு பன்னீர் கரும்புகள் விற்பனைக்காக திண்டுக்கல்லுக்கு வரத்துவங்கியுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் அக்டோபரில் துவங்க வேண்டிய கரும்பு சீசன் காலதாமதமாக நவம்பர் கடைசியில் தொடங்கியுள்ளது.நத்தம் பட்டணம்பட்டி, சாணார்பட்டி, ஒட்டன்சத்திரம், மதுரை மேலூரில் கரும்பு பயிரிடப்படுகிறது. திண்டுக்

கல்லுக்கு தினமும் 12 டன் எடை அளவில் பொங்கல் கரும்புகள் விற்பனைக்கு வரவழைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு கட்டு ஒன்றுக்கு ரூ.160 லிருந்து ரூ.180 வரை விற்கப்பட்ட பன்னீர் கரும்பு தற்போது கட்டு ஒன்றுக்கு ரூ.300 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.கொசவபட்டி வியாபாரி இருதயராஜ் கூறுகையில்,""முன்பு 1000 ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. தற்போது 100 ஏக்கர் பரப்பளவாக சுருங்கி விட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆயுதபூஜைக்கு முன்பே பன்னீர் கரும்பு சீசன் பொங்கல் பண்டிகைக்காக விற்பனைக்கு வந்து விடும். விலை அதிகரிப்பால் ஒரு கரும்பு ரூ.30 க்கு விற்கப்படுகிறது," என்றார்.

**<u>வேதாரண்யம் பகுதியில் கன மழை 12 மணிநேரத்தில் 40.2 மி.மீ., பதிவு</u>**

வேதாரண்யம்: வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு பகுதியில் நேற்று முன் தினம் இரவு முதல் பரவலாக கன மழை பெய்து வருகிறது. நேற்று காலை 8 மணி வரையிலான, 12 மணி நேரத்தில் வேதாரண்யத்தில், 40.2 மி.மீ மழையும், தலைஞாயிறில் 69.8 மி.மீ மழையும் பெய்துள்ளது. கனமழை, கடல் சீற்றம் காரணமாக வேதாரண்யம் ஆறுகாட்டுத்துறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம் மற்றும் வானவன்மகாதேவி போன்ற பத்து கிராமங்களைச் சேர்ந்த சுமார் நான்காயிரம் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. இதையடுத்து, 700 மேற்பட்ட பைபர் படகுகள், 70 விசைப்படகுகள் மற்றும் கட்டுமரம் போன்றவற்றை கடற்கரை யோரத்திலும், ஆற்றுப்பகுதியிலும் பாதுகாப்பாக, மீனவர்கள் நிறுத்தி வைத்துள்ளனர். மானாவரி பகுதியான வேதாரண்யம் வட்டாரத்தில் ஆதனூர், அண்டர்காடு, ஆயக்காரன் புலம், மருதூர், நெய்விளக்கு, கருப்பம்புலம், குரவப்புலம், கத்திரிப்புலம் உள்ளிட்ட, 15 கிராமங் களில்,10 ஆயிரம் ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு மூலம் செய்யபட்டுள்ள பயிர்களுக்கு, தற்போது பெய்து வரும் மழையினால்,

வயலில் தண்ணீர் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மானாவரி சாகுபடி வயல்களில் களையெடுப்பு பணிகளை விவசாயிகள் தொடங்கி உள்ளனர். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு பெய்த தொடர் மழையினால், தலைஞாயிறு பகுதியில் சம்பா சாகுபடி பயிர்கள் நீரில் முழ்கின. தற்போது மீண்டும் மழை பெய்து வருவதால் பயிர்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## 142 அடியை எட்டிய முல்லைப்பெரியாறு: விவசாயிகள், மக்கள் கொண்டாட்டம்

கூடலூர்:பெரியாறு அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு 142 அடியை எட்டியதைத் தொடர்ந்து நேற்று லோயர்கேம்ப் பென்னிகுவிக் மணிமண்டபத்தில் விவசாயிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் விழா கொண்டாடினர். பெரியாறு அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு 142 அடியை எட்டியது. தென்தமிழக விவசாயிகளின் 36 ஆண்டு கால எதிர்பார்ப்பு நிறைவேறி யதால் மகிழ்ச்சியில் மூழ்கினர். நேற்று முழுவதும் லோயர்கேம்பில் உள்ள பென்னிகுவிக் மணி மண்டபம் விழா கோலம் பூண்டிருந்தது. பொதுப் பணித்துறையினர் சார்பில் வண்ண விளக்குகளினால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பொதுப்பணித்துறை சார்பில் பொங்கல் வைத்து பொதுமக்களுக்கு வழங்கினர். மதுரை பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் பாண்டியன், மண்டபம் வளாகத்தில் 142 மரக்கன்றுகளை நட்டார். கூடலூர் மக்கள் மன்றம் சார்பில் பென்னிகுவிக் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. முல்லைப் பெரியாறு மீட்பு இயக்கம் சார்பில் அணையில் 142 அடி நீர் தேங்கியதை நினைவு கூறும் வகையில் 142 தேங்காய்கள் உடைக்கப்பட்டன. மேலும், பள்ளி மாணவிகள் மெழுகுவர்த்தி ஏற்றி ஊர்வலமாக வந்தனர். பொங்கல் வைத்து பிரசாதம் வழங்கினர். ஐந்து மாவட்ட விவசாய சங்க தலைவர் அப்பாஸ், முல்லைப்

பெரியாறு மீட்புக்குழு தலைவர் ரஞ்சித், 18ம் கால்வாய் விவசாய சங்க தலைவர் ராமராஜ், செயலாளர் திருப்பதிவாசன், துணைத்தலைவர் காளிமுத்து மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். லோயர்கேம்பில் பொதுமக்கள் பொங்கல் வைத்தனர். கூடலூர் காய்கறி மார்கெட் அருகே பெண்கள் பென்னிகுவிக் படத்திற்கு அபிஷேகம் செய்து, பொங்கல் வைத்தனர். பஸ்களில் செல்லும் பயணிகளுக்கு பொங்கல் பிரசாதம் வழங்கினர். கம்பம்: முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டியதை தொடர்ந்து கம்பம் பள்ளத்தாக்கில் விவசாயிகளும், பொதுமக்களும் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 142 அடியாவதற்கு போக்கு காட்டி வந்த நிலையில், அணையில் இருந்து வெளியேறும் தண்ணீரை நிறுத்தினர். தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு அணையில் நீர்மட்டம் 142 அடியை எட்டியது. கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி யடைந்தனர். நேற்று காலை கம்பத்தில் கம்பம் விவசாயிகள் சங்கம் சார்பில் அதன் தலைவர் நாராயணன், செயலாளர் சுகுமாரன், நீரினை பயன்படுத்துவோர் சங்க நிர்வாகி ராமகிருஷ்ணன் உள்ளிட்ட விவசாயிகள் மெயின்ரோட்டில் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். தொடர்ந்து முல்லைப் பெரியாறு அணை மீட்புக்குழு சார்பில் ஐந்து மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் அப்பாஸ், செயலாளர் ரஞ்சித், 18 ம் கால்வாய் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ராமராஜ், மாணிக்கவாசகம், யோகா பயிற்சியாளர் ரவிராம் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் பட்டாசுகள் வெடித்தனர். தொடர்ந்து வக்கீல்கள், வர்த்தகர்கள் என பலதரப்பட்ட பொதுமக்கள் பட்டாசுகள் வெடித்தனர். கம்பம் மெயின்ரோட்டில் நேற்று பகல் முழுவதும் பட்டாசு சத்தம் கேட்டவண்ணம் இருந்தது. உத்தமபாளையம் : உத்தமபாளையம் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் உள்ள பென்னிக்குக் சிலைக்கு கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சங்க தலைவர்

தர்வேஷ்முகையதீன், சகுபர் அலி, சின்னமனூர் விவசாயிகள் சங்க தலைவர் செல்லாராமன் உள்ளிட்ட பலர் மாலையணிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். உத்தமபாளையம் வக்கீல்கள் சங்க செயலாளர் பார்த்திபன் தலைமையில் 50 க்கும் மேற்பட்ட வக்கீல்கள் பென்னிக்குக் சிலைக்கு மாலையணிவித்து, இனிப்புகள் வழங்கினர். கம்பம் டாக்சி ஸ்டாண்டில், வாடகை கார் ஓட்டுனர்கள் சங்கம் சார்பில் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

## <u>மலைவாழையில் நோய் தாக்குதலால் விவசாயிகள்..எலுமிச்சை, மிளகு சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்பு</u>

தேனி:தேனி மாவட்டத்தில் மலைவாழையில் நோய் தாக்குதலால் பல ஆண்டுகளாக அப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அப்பகுதியில் எலுமிச்சை, மிளகு சாகுபடிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தேனி மாவட்ட பகுதியில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் அகமலை,போடி வடக்கு மலை, மேற்கு மலை, மேகமலை உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான உட்கடை கிராமங்கள் உள்ளன. இதில் 50 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட மலைப்பகுதியில் மலைவாழை சாகுபடி செய்யப்பட்டு வந்தது. உடல் ஆரோக்கியத்தில் முதலிடம் வகிக்கும் இந்த மலைவாழை தொடர்ந்து பலன் தந்து வந்தது. இதனால் இப்பகுதி மலைவாழ் விவசாயிகள் செழிப்புடன் இருந்தனர். இந்நிலையில் 1975ம் ஆண்டு வாக்கில் மலைவாழையில் திடீர் நோய் தாக்குதல் ஏற்பட் டது. விளைச்சல் பாதிக்கப்பட்டது. முடி கொத்து நோய் என்றழைக்கப்பட்ட இந்த நோய்க்கு இதுவரை முற்றிலும் தீர்வு காணப்படவில்லை. இதனால் இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அதே போல் காபி பயிரில் காய் துளைப்பான் நோய் தாக்குதலால் இதை நம்பியிருந்த விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர். இதனால் இந்த பகுதியில் மலைவாழ் கிராம மக்கள் கூலி வேலைக்கு செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே இந்த பகுதியில் நோய் தாக்குபிடிக்கும்

எலுமிச்சை, மிளகு சாகுபடியை ஊக்கப்படுத்த தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எலுமிச்Øகு கோடை காலத்தில் தேவை அதிகம் இருப்பதாலும், மதிப்புகூட்டி பதப்படுத்தி விற்பனை செய்யும் வாய்ப்பு உள்ளது. அதே போல் மிளகு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு உள்ளது. நோய் தாக்குதலும் குறைவு. எனவே அதிகாரிகள் இந்த பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு மிளகு, எலுமிச்சை சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், அதற்கான தொழில்நுட்ப ஆலோசனை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## <u>சாகுபடி அதிகரிப்பு</u>

தேனி;தேனி மாவட்டத்தில் நெல்லி, எலுமிச்சை, மாதுளை சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுவதால் இதன் சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது. சப்போட்டா, மா, நெல்லி, எலுமிச்சை, மாதுளை சாகுபடி செய்ய தோட்டக்கலைத்துறை அதிகளவு மானிய உதவிகள் வழங்கி வருகிறது. ஆனால் சப்போட்டா, மா சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இந்த பழங்களுக்கு சேமிப்பு வசதிகளும், விற்பனை வசதிகளும் இல்லை. விளைபொருட்களுக்கு விலையும் கிடைப்பதில்லை. ஆனால் நெல்லி, எலுமிச்சை, மாதுளைக்கு நல்ல சந்தை வசதி உள்ளது. இவற்றிற்கு அதிகளவு விலை கிடைப்பதோடு விற்பனை வசதிகளும் உள்ளது. சேமிப்பதிலும் பிரச்னை இல்லை. எனவே சமீபகாலமாக மா, சப்போட்டா சாகுபடி செய்த விவசாயிகள் கூட நெல்லி, மாதுளை, எலுமிச்சை சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

## <u>விவசாயிகளுக்கு பயிற்சி</u>

ராமநாதபுரம்:ராமநாதபுரம் அருகே தெற்குதரவையில் வேளாண் விரிவாக்க துணை இயக்கம் சார்பில் தென்னை விவசாயிகளுக்கு

பண்ணை பள்ளி பயிற்சி நடந்தது. திட்ட அலுவலர் உதுமான் முகைதீன் தலைமை வகித்தார். ராமநாதபுரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ராமசாமி பாண்டியன் முன்னிலை வகித்தார். தொழில்நுட்ப வல்லுனர் கருணை தாசன், வேளாண் அலுவலர் ராஜலட்சுமி பயிற்சி அளித்தனர். ஏற்பாடுகளை செய்தனர். விரிவாக்க துணை அலுவலர்கள் கோசலா தேவி, சுபாஷ் சந்திர போஸ், சேகர் பங்கேற்றனர்.

**<u>வைகை தண்ணீரை வீணாக்காமல் பாசனத்திற்கு பயன்படுத்த வேண்டும்</u>**

ராமநாதபுரம்:வைகையில் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப் பட்டுள்ளதால், ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது. கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. விவசாயத்துறை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். கலெக்டரின் நேர்முக உதவியாளர்( வேளாண்) கனகராஜன் முன்னிலை வகித்தார். இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி பேசுகையில்,"வைகை அணையில் இருந்து ராமநாதபுரம் மாவட்டத்திற்கு திறந்துவிடப்படும் தண்ணீரை பயன்படுத்தி விவசாயிகள் நடப்பாண்டுக்கான விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்," என்றார்.நிகழ்ச்சியில் பரமக்குடி வேளாண் பல்கலையின் வேளாண் அலுவலர், பொன்னுச்சாமி,கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் துரைசிங், நயினார்கோயில் விவசாயி பாலு, சோலாந்தூர் பாலகிருஷ்ணன், மாலைச்சந்திரன், மதுரைவீரன், பாலசுந்தர மூர்த்தி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**<u>குமரி மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிப்பு</u>**

நாகர்கோவில்: கன்னியாகுமரி மாவட்ட ஆவின் பால் உற்பத்தியாளர்கள் சங்க பேரவை கூட்டம் நாகர்கோவில் ஆவின் அலுவலகத்தில் நடைபெற்றது. ஆவின் தலைலவர் அசோகன் தலைமை வகித்தார். பொது மேலாளர் சுந்தரமகாலிங்கம், துணை பதிவாளர் கிறிஸ்துதாஸ் மற்றும்

உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். பின்னர் தலைவர் அசோகன் கூறியதாவது: குமரி மாவட்டத்தில் ஏழாயிரம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி தற்போது 8230 லிட்டராக அதிகரித்துள்ளது. ஆவினுக்கு 92 லட்சத்து 96 ஆயிரத்து 111 ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. 21 ஆயிரத்து 398 கிலோ விற்பனை ஆகியுள்ளது. 200 கிராம் பாதாம் பவுடர் 23 லட்சத்து 37 ஆயிரத்து 785 பாக்கெட்டுகள் விற்பனை ஆகியுள்ளது. 200 மில்லி மோர் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 200 பாக்கெட் விற்பனை ஆகியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**<u>தூத்துக்குடி மாவட்டத்தில் கொட்டி தீர்த்தது மழை : திருச்செந்தூரில் 190.50 மி.மீ.,</u>**

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில் விடிய விடிய மழை கொட்டி தீர்த்தது. திருச்செந்தூர், காயல்பட்டிணம், சாத்தான்குளம் தண்ணீரில் மிதக்கின்றன. வெள்ள நீர் வடியாததால், பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன் தினம் காலையில் இருந்தே பரவலாக மாவட்டம் முழுவதும் மழை பெய்ய துவங்கியது. தொடர்ந்து சாரலும், கனமழையுமாக மாறி, மாறி பெய்தது. இதில் ரோடுகள், தெருக்களில் வெள்ளம் சூழந்தது. தொடர் மழை காரணமாக வெள்ள நீர் வடிய வழியின்றி தேங்கி கிடப்பதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் வடிகால்களை ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதால், வெள்ள நீர் வடிகால்களுக்கு செல்லாமல் தேங்கியுள்ளது. திருச்செந்தூர், காயல்பட்டிணம், சாத்தான்குளம் ஆகிய பகுதிகளிகல் வெள்ளம் சூழ்ந்துள்ளது. வெள்ள நீரை வெளியேற்ற முடியாமல் உள்ளாட்சி நிர்வாகங்கள் தவித்து வருகின்றன. அதிகபட்சமழை: நேற்று முன் தினம் காலை 6 மணி முதல் நேற்று காலை 6 மணிவரை பெய்த மழை அளவு மி.மீ., ல்: கோவில்பட்டி,33, ஓட்டப்பிடாரம் 42, சாத்தான்குளம் 188,

ஸ்ரீவைகுண்டம் 74, தூத்துக்குடி 88.50, திருச்செந்தூர் 190.50, விளாத்திகுளம் 20, கயத்தாறு, 24, காயல்பட்டிணம் 175, குலசேகரபட்டிணம் 127, கீழ அரசரடி 29,எட்டையபுரம்,3, கடம்பூர்,39, மணியாச்சி,32, வேடநத்தம் 10, சூரன்குடி,15,காடல்குடி 26, வைப்பாறு,30, கழுகுமலை,38, மாவட்டத்தில் மொத்தமாக 1,184 மி,மீ., ம், மழையளவு சராசரியாக 62.32 சதவீதமும் பதிவாகியது. திருச்செந்தூரில் அதிகபட்ச மழையளவும், எட்டையபுரம் குறைந்த அளவும் பதிவாகியுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தோட்டக்கலை துறை சார்பில் நவீன தொழில்நுட்பத்தில் கூடுதல் மகசூல்</u>**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்ட தோட்டக்கலைத் துறையின் உதவியுடன், அதகப்பாடி கிராமத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத் தின் சார்பில், மாது என்பவரது நிலத்தில் 500 சதுர மீட்டர் பரப்பளவில் நிழல் வலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் தென் னை நார் கழிவுகளில் விதை யிட்டு பச்சை மிள காய், கத்தரிக்காய், தக்காளி ஆகி யவை சொட் டுநீர் பாசன திட்டத் தின் மூலம் பயிரிப்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயி மாது கூறுகையில், ஒரு வருடத்தில் 500 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த விதைப்பண்ணைக்கு 50 சதவீதம் மானியம் அதாவது தி75 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பண்ணையில் 12 லட்சம் முதல் 16 லட்சம் வரை நாற்றுகள் உற்பத்தி செய்து பென்னாகரம், பாப்பாரப்பட்டி,

தர்மபுரி, காரிமங்கலம், சேலம், நாமக்கல், மேச்சேரி போன்ற இடங்களுக்கு விற்பனை செய்கிறோம். உற்பத்தி செய்யப்படும் மிளகாய் நாற்று ஒன்று 50 பைசாவிற்கும், தக்காளி மற்றும் கத்திரி போன்ற நாற்றுகள் 30 பைசாவிற்கும் விற்கப்படுகிறது. வருடத்திற்கு சுமார் 6 முதல் 8 முறை வரை நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது என தெரிவித்தார். தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் பசுமை இல்லம், காரிமங்கலம் மூக்கனூரில் வேடியப்பன் என்பவர் 4 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் அவர் குடைமிளகாய் சாகுபடி செய்து வருகிறார். பசுமை இல்லம் அமைக்க சுமார் தி37 லட்சத்து 40 ஆயிரம் செலவாகிறது. இதில் அரசு மானியமாக தி18 லட்சத்து 70 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இங்கு உயர்ரக இறக்குமதி குடைமிளகாய் ரகமான இன்சிபிரேசன், பட்ஜட்டா ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகிறது. பயிரிடப்பட்ட 90 நாளில் ஆரம்பித்து ஒரு மாதத்திற்கு 7 முதல் 8 முறை அறுவடை செய்யப்படுகிறது. ஒரு அறுவடைக்கு 1 முதல் 1.20 டன் வரை மகசூல் கிடைக்கிறது. மாதத்திற்கு 8 அறுவடை வீதம் 3 மாதங்களில் சுமார் 24 டன் மகசூல் கிடைக்கிறது. மேலும் 3 மாதங்களுக்கு 15 டன் மகசூல் எதிர்பார்க்கலாம். ஒரு கிலோ குடைமிளகாய் சராசரியாக தி43 வீதம் 3 மாதங்களில் தி10 லட்சத்து 32 ஆயிரம் வருமானம் கிடைக்கிறது. இவற்றை மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர் பார்வையிட்டார். வேளா ண்மை துறை இணை இயக்குனர் மோகன், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கலைசெல்வி, துணை இயக்குநர்கள் வேணுகோபால், வெங்கடேசன், பாஸ்கரன், சுசிலா, உதவி செயற்பொறியாளர் முருகேசன், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன், உதவிப்பொறியாளர்கள் பிரசன்னா, அறிவழகன், சுப்பிரமணியன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சிறுதானிய விற்பனைக்கு திருச்சியில் தனி இடவசதி

துறையூர், ந: சிறுதானிய உற்பத்தியை விவசாயிகள் பெருக்க வேண்டும் என்று உப்பிலியபுரத்தில் நடந்த மண்விண் விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனி துவக்க விழாவில் கலெக்டர் ஜெயஸ்ரீ பேசினார். உப்பிலிய புரம், துறையூர் பகுதி விவசாயிகள் இணைந்து மண்விண் விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனி நிறுவனத்தை துவக்கியுள்ளனர். நிறுவன துவக்கவிழா உப்பிலியபுரத்தில் நடந்தது. நிர்வாக இயக்குநர் தொல்காப்பியன் நிறுவனத்தின் செயல்பாடு பற்றி பேசினார். இயக்குநர் சீனிவாசன் வரவேற்றார். வேளாண் துறை துணை இயக்குநர்கள் பாண்டியராஜன், சந்திரசேகர், செல்வ ராஜ், தோட்டக்கலை துறை துணை இயக்குநர் சந்திரசேகர், இன்ஜினியரிங் பிரிவு பாஸ்கரன், நபார்டு வங்கி மேலாளர் சுரேஷ்குமார், விவசாயிகள் வாழ்த்தி பேசினர். திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ, இடுபொருள் விற்பனை மைய சான்றிதழ் வழங்கி விற்பனையை துவக்கி வைத்து பேசியதாவது: விவசாயிகள் முன்னேற்றத்திற்காக அரசு வேளாண் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வேளாண், தோட்டக்கலை துறை அலுவலர்களை அணுகி விவசாயிகள் பயன்பெறலாம். திருச்சியில் அரசு சார்பில் சிறுதானிய கண் காட்சி நடத்தியபோது நல்ல வரவேற்பு இருந்தது. சிறு தானிய உற்பத்தியை விவசாயிகள் பெருக்க வேண்டும். சிறுதானிய விற்பனைக்கு திருச்சியில் தனி இடவசதி செய்து தரப்படும். விவசாய விளைபொருட்கள் ஒரே சமயத்தில் விற்பனைக்கு வருவ தால் விவசாயிக்கு உரிய பலன் கிடைப்பதில்லை என்ற குறையை இதுபோன்ற நிறுவனங்களை விவசாயிகள் துவக்கி நடத்துவதன் மூலம் போக்க முடியும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.

**<u>உற்பத்தி குறைப்பால் முட்டை விலை தொடர்ந்து அதிகரிப்பு</u>**

நாமக்கல், : நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி குறைக்கப்பட்டதால் தேவை அதிகரித்து படிப்படியாக விலை அதிகரித்து வருகிறது. இம்மாத தொடக்கத்தில் ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 315 காசாக இருந்தது. அந்த விலை படிப்படியாக உயர்ந்து தற்போது 376 காசாக உயர்ந்துள்ளது. முட்டை விலை உயர்வு குறித்து தமிழ்நாடு முட்டை கோழி பண்ணையாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் சுப்பிரமணியம் கூறுகையில், 'கோழிப்பண்ணை தொழிலில் தொடர் நஷ்டம் ஏற்பட்டதால், கடந்த 6 மாதத்துக்கு முன் பண்ணைகளில் விடும் குஞ்சுகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொண்டனர். இதனால் முட்டை உற்பத்தி 10 சதவீதம் குறைந்துள்ளது. தற்போது முட்டைக்கு தட்டுப்பாடு அதிகம் உள்ளதால் விலை உயர்த்தப்பட்டு வருகிறது'' என்றார். இந்நிலையில் நேற்று நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு விற்பனை நிலவரம் குறித்து ஆலோசித்தனர்.முட்டை விற்பனை தொடர்ந்து உயர்ந்து வருவதால், விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது. முட்டை விலையில் 9 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் விலை 376 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்) பெங்களூரு- 395, சென்னை- 402, மைசூர்- 392, ஐதராபாத்- 384, மும்பை- 424, விஜயவாடா- 375, கொல்கத்தா- 420, பர்வாலா- 400, டெல்லி- 415 காசுகள்.

## நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் ரூ 1.30 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல், : நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று (20ம் தேதி) பருத்தி ஏலம் நடந்தது. சங்கத்துக்கு மொத்தம் 110 மூட்டை பருத்தி விவசாயிகளால் கொண்டு வரப்பட்டிருந்தது. இவை பகிரங்க ஏலமுறையில் விடப்பட்டது. மொத்தம் ரூ1.30லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி எச் ரக பருத்தி மட்டுமே நேற்று கொண்டு வரப்பட்டிருந்தது. இந்த ரக பருத்தி ஒரு குவிண்டால் ரூ4050 முதல் ரூ4196க்கு ஏலம் போனது.

## நடவு முறை துவரை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறலாம்

அன்னவாசல், : நடவுமுறையில் துவரை சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் பெறலாம் என உழவர் விவசாயிகளுக்கான பயிற்சி முகாமில் வேளாண் இணை இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார். புதுக் கோட்டை அடுத்த குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் ஆலங்குடி வட்டாரத்தில் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது. இப்பயிற்சியினைப் புதுகை வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் தலைமை வகித்து துவக்கி வைத்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் சாந்தி முன்னிலை வகித்தார். பயிற்சியில் இணை இயக்குநர் ஷாஜஹான் பேசுகையில், நடவுமுறையில் துவரை சாகுபடி செய்வதால் சாதாரண முறையில் சாகு படி செய்வதால் கிடைக்கும் மகசூலை விட இரு மடங்கு கூடுதலாக மகசூல் கிடைக்கும். இதன்மூலம் பயறு உற்பத்தியைப் பெருக்கிக் கூடுதல் லாபம் பெறலாம். மேலும் நடவுமுறை துவரை சாகுபடியில் தொழில் நுட்பங்களைத் தவறாது கடைபிடிப்பது அவசியம் என்றார். உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி, நடவுமுறை துவரை சாகுபடியில் இடைவெளி அதிகமாக விட்டு நடவுசெய்வதால் ஊடுபயிர்

சாகுபடி மேற்கொண்டு கூடுதல் வருமானம் பெறலாம் என்றார். குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன், நடவுமுறையில் துவரை சாகுபடி தொழில்நுட்பங்களைக் குறிப்பாக தரமான விதைத்தேர்வு, விதை கடினப்படுத்துதல், விதை நேர்த்தி, நடவுமுறைகள், உரமிடுதல், களை நிர்வாகம், பயிர்ப் பாதுகாப்பு போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து படக்காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு விளக்கினார். இப்பயிற்சியில் வேளாண் அலுவலர் ஜெகதீஸ்வரி, நடவுமுறை துவரை சாகுபடியில் பயிர்ப்பாதுகாப்பு குறித்து ஆலோசனை தெரிவித்தார். திருவரங்குளம் வேளாண் அலுவலர் அன்பரசன், திருவரங்குளம் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் குறித்தும், மானியத்தில் விநியோகிக்கப்படும் வேளாண் இடுபொருட்கள் குறித்தும் விளக்கினார். பயிற்சியில் ரசாயன விதைநேர்த்தி, உயிர்உர மருந்து விதைநேர்த்தி தொழில்நுட்பங்களை செயல்விளக்கமாக விவசாயிகளுக்கு அட்மா வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மகேந்திரன் செய்து காண்பித்தார். பங்கேற்ற விவசாயிகளுக்கு பயிற்சி ஊக்கத்தொகையும் தொழில்நுட்பக் கையேடுகளும் வழங்கப் பட்டது. திருவரங்குளம் வட்டார உதவி வேளாண் அலுவலர் ரமேஷ், உதவி வேளாண் அலுவலர்கள் கலந்துகொண்டனர். குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

## <u>மேய்க்கால் நிலத்தில் பசும்புல் வளர்ப்பு</u>

புதுக்கோட்டை, : மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் தீவன புல் வளர்ப்பதற்காக வேளாண் துறை இணை இயக்குனர் ஷாஜகான், புதுவாழ்வு திட்ட மேலாளர் வசுமதி ஆகியோர் கள ஆய்வு செய்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கையாக மேய்கால் புறம்போக்கு நிலத்தில் தீவன புல் வளர்க்க மாநில திட்ட இயக்குனர் உத்தரவினை தொடர்ந்து குண்றாண்டார்கோவில் ஒன்றியம், மூட்டாம்பட்டி

கிராமத்தில் சாத்திய கூறுகள் மற்றும் நிலத்தின் தன்மை ஆகியவை குறித்து வேளாண் இணை இயக்குனர் ஷாஜகான், புதுவாழ்வு திட்ட மேலாளர் வசுமதி ஆகியோர் கள ஆய்வு செய்தனர். பின்னர் புதுவாழ்வு திட்டம் செயல்படும் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒரே தொழில் செய்யும் ஏழை குடும்பங்களை சேர்ந்த 70 பேரை உறுப்பினர்களாக கொண்டு தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது. அதன்படி, மூட்டாம்பட்டி கிராமத்தில் 50 நபர்களை கொண்ட முத்துமாரியம்மன் கறவை மாடு வளர்ப்போர் தொழில் குழு அமைக்கப்பட்டன. இது குறித்து வேளாண் இணை இயக்குனர் ஷாஜகான் கூறுகையில், பசும்புல் வளர்க்க தேவையான உதவிகள் செய்வதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். தொழில் குழுவில் கூட்டாக இணைந்து பால் உற்பத்தியை பெருக்கி சிறப்பாக செயல்படலாம் என்றார். கள ஆய்வு ஏற்பாடுகளை புதுவாழ்வு திட்ட உதவி திட்ட மேலாளர்கள் செந்தில்முருகன், நடராஜன் மற்றும் மூட்டாம்பட்டி ஊராட்சி, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான மகளிர் குழுக்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## பிடிஆர் கால்வாய் தண்ணீர் சின்னமனூரில் தடம் பதித்தது விவசாயிகள் மகிழ்ச்சி

சின்னமனூர்,: பிடிஆர் கால்வாயில் முதல்போக நெல் சாகுபடி பாசனத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று சின்னமனூர் வந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முல்லை பெரியாறு லோயர்கேம்ப்பில் துவங்கி வீரபாண்டி வழியாக வைகை அணையை சென்றடைகிறது. கருங்கட்டான்குளம், சீலையம்பட்டி, கோட்டூர், உப்பார்பட்டி விலக்கு, தப்புக்குண்டு, தாடிச்சேரி பகுதி விவசாயிகளுக்கு ஒரு போக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் தவித்து வந்தனர். பாசனத்திற்கு தண்ணீர் பிடிஆர் கால்வாய் வழியாக

திறந்து விடப்படும். இதற்காக உத்தமபாளையம் வாய்க்கால் பட்டியிலிருந்து 25 கிமீ தூரத்திற்கு கால்வாய் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கால்வாய் பாசனம் மூலம் சுமார் 2,500 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. தற்போது பாசனத்திற் காக பிடிஆர் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் முத்துலாபுரம் வழியாக சின்னமனூர் வந்தடைந்தது. இதனால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வெள்ளாடுகள் வளர்ப்பதற்கான பயிற்சி

ராஜபாளையம். : ராஜபாளையத்தில் மகளிர் குழு க்களை சேர்ந்த 72 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள் வளர்ப்பது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. ராஜபாளையத்தில் கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் சார்பில் தேசிய வேளாண்மை வளர் ச்சி திட்டத்தில் உள்ள தே சிய புரதச் சத்து மேம்பாட்டு திட்டம் மூலம் மகளிர் குழுக்களுக்கு பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டது. இந்த திட்டத்தில் மகளிர் குழுக்களை சேர்ந்தவர்கள் மற்றும் புதுவாழ்வு திட்ட மகளிர் குழுக்களை சேர்ந்த 72 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு புரதச் சத் தை அதிகரிக்க வெள்ளாடுகளை வளர் ப் பது குறித்த பயிற்சி கொடுக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்களுக்கு 10 வெள்ளாடுகளும் அத னை வளர்ப்பதற்கு கொட்ட கை அமைப்பதற்கு அரசு மானியத்துடன் பணமும், மூன்று மாதத்திற்கு அடர் தீவனமும் இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. விழாவில் கால்நடை பராமரிப்பு துறையின் மா வட்ட மண்டல இணை இயக்குநர் (பொ) செல்லச் சாமி, திருவில்லிபுத்தூர் கோட்ட உதவி இயக்குநர் சஞ்சீவி ராஜ், ராஜபாளை யம் பயிற்சி மையத்தின் இணை பேராசிரியர் கதிர்வேல், உதவி பேராசிரியர் சீனி வாசன் ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினர்.

## பொய்கை அணைக்கு தண்ணீர் வரும் கால்வாய்களை சீரமைக்க திட்டம் அட்மா குழு சீரமைக்கப்படும்

நாகர்கோவில், : பலத்த மழையிலும் நிரம்பாத பொய்கை அணைக்கு தண்ணீர் வரும் கால்வாய்களை சீரமைக்க ரூ.3 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருப்பதாகவும், விரைவில் இதற் கான டெண்டர் விடப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் சஜ்ஜன்சிங் ஆர். சவான் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அதிகாரி உதயகுமார், வேளாண் இணை இயக்குனர் பொன் காத்த பெருமாள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு) கலாவதி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டம் தொடங்கியதும் முதலில் உர பிரச்னை தொடர்பாக விவசாயிகள் பேசினர். இதற்கு பதிலளித்து கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் பேசுகையில், குமரி மாவட்டத்தில் தற்போது 6001 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது. இவற்றில் யூரியா 1385 மெட்ரிக். டன் உள்ளது. விவசாயிகளுக்கு தட்டுப்பாட்டின்றி டான் பெட் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக உரங்கள் வினியோகம் செய்யப்படும்" என்றார். பின்னர் கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு : வின்ஸ் ஆன்றோ (பாசனத்துறை தலைவர்) : முளகுமூடு பேரூராட்சிக்குட்பட்ட குழிக்கோடு பகுதியில் பாசன கால்வாயை மூடி சாலை அமைக்கப்பட்டு இருந்தது. பொதுமக்கள் உதவியுடன், மணலை அகற்றி பாசன கால்வாய் தோண்டப்பட்டது. இந்த பகுதியில் இடையூறாக உள்ள மின்கம்பங்களை அகற்றி விட்டு தடுப்பு சுவர் அமைக்க வேண்டும். இது பற்றி பேரூ ராட்சி உதவி இயக்குனர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட மனு கிடப்பில் உள் ளது. உடனடியாக அந்த மனுவை பரிசீலனை செய்து இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். (அப்போது பேரூராட்சி அதிகாரி ஒருவர் எழுந்து, இந்த மனு

உடனடியாக பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.)

புலவர் செல்லப்பா : குமரி மாவட்ட குளங்களை தூர்வார வேண்டும். இந்த பணியை நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு வழங்க வேண்டும். வனப்பகுதிகளில் இருந்து சுமார் 10 கி.மீ. தூரம் வரையில் உள்ள தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தி சூழியல் உணர்ச்சி மண்டலமாக மாற்ற மேற்கொள்ளும் நடவடிக்கையை கைவிட வேண்டும். விரைவில் டெண்டர் விடப்படும். பலத்த மழையிலும் நிரம்பாத அணை புலவர் செல்லப்பா : குமரி மாவட்ட குளங்களை தூர்வார வேண்டும். இந்த பணியை நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு வழங்க வேண்டும். வனப்பகுதிகளில் இருந்து சுமார் 10 கி.மீ. தூரம் வரையில் உள்ள தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தி சூழியல் உணர்ச்சி மண்டலமாக மாற்ற மேற்கொள்ளும் நடவடிக்கையை கைவிட வேண்டும். குணசீலன் : மாவட்டத்தில் உள்ள அணைகளை தூர்வார வேண்டும். தேங்காப்பட்டணம் சந்திப்பில் உள்ள ஏ.வி.எம். சானலில் 50க்கும் மேற்பட்ட இறைச்சி வெட்டும் கடைகளில் இருந்து கழிவுகள் கொட்டப்படுகின்றன. மருங்கூர் செல்லப்பன் : குமரி மாவட்டத்தில் உள்ள பாசன சபையின் காலவரம்பு நீடிக்கப்பட்டு உள் ளதா? என்பதை அறிவிக்க வேண்டும். மருங்கூர் செல்லப்பன் : குமரி மாவட்டத்தில் உள்ள பாசன சபையின் காலவரம்பு நீடிக்கப்பட்டு உள் ளதா? என்பதை அறிவிக்க வேண்டும். வருக்கத்தட்டு தங்கப்பன் : மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குவது போல், விவசாய குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்க வேண்டும். பரசேரி விஜி : நான்கு வழிச்சாலை அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட விவசாய நிலங்களுக்கு அதிக நஷ்ட ஈடு வழங்க வேண்டும். தாணுப்பிள்ளை : தற்போது மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் அணைகள் நிரம்புகின்றன. ஆனால் பொய்கை அணை மட்டும் நிரம்பாமல் உள்ளது. இந்த அணைக்கு தண்ணீர் வரும் பகுதிகள் ஆக்ரமிப்பில் உள்ளன. இந்த கால்வாய்களை சீரமைத்தால் பொய்கை அணையும் நிரம்பும். இதன்

மூலம் சுமார் 500 ஏக்கருக்கு மேல் நேரடி பாசன வசதி பெறும். இவ்வாறு விவாதங்கள் நடந்தன.இதற்கு பதிலளித்து வேளாண் துறை மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது : விவசாயிகளுக்கு சுழல் நிதி வழங்குவது குறித்து அரசு தான் முடிவு செய்ய வேண்டும். மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, வனப்பகுதியை சுற்றி 10 கி.மீ. தூரத்துக்கு சூழியல் மண்டலமாக அறிவிக்க உத்தரவிட்டு உள்ளது. ஆனால் இந்த மாவட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி, 2 கி.மீ. அகலத்துக்கு மட்டுமே சூழியல் மண்டலமாக அறிவிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நான்கு வழிச்சாலைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நெடுஞ்சாலைத்துறை சட்ட பிரிவுப்படி நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வருகிறது. பொய்கை அணைக்கு நீர் வரத்தை அதிகரிக்கும் வகையில் இரைப்பை ஆறு, சுங்கான்கடை ஓடை ஆகியவற்றை சீரமைக்க ரூ3 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விரைவில் டெண்டர் விடப்பட உள் ளது. இன்னும் 6 மாதத்தில் இந்த பணிகள் தொடங்கும். இவ்வாறு அவர்கள் கூறினர். கூட்டத்தில் அதிகாரிகள் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆனால் இந்த மாவட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி, 2 கி.மீ. அகலத்துக்கு மட்டுமே சூழியல் மண்டலமாக அறிவிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நான்கு வழிச்சாலைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நெடுஞ்சாலைத்துறை சட்ட பிரிவுப்படி நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வருகிறது. பொய்கை அணைக்கு நீர் வரத்தை அதிகரிக்கும் வகையில் இரைப்பை ஆறு, சுங்கான்கடை ஓடை ஆகியவற்றை சீரமைக்க ரூ3 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விரைவில் டெண்டர் விடப்பட உள் ளது. இன்னும் 6 மாதத்தில் இந்த பணிகள் தொடங்கும். இவ்வாறு அவர்கள் கூறினர். கூட்டத்தில் அதிகாரிகள் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பேசிய விவசாயிகள் சிலர், விவசாயிகளின் நலன்களுக்காக

கொண்டு வரப்பட்ட அட்மா குழுவில் ஆளுங்கட்சியினரும், ஓய்வு பெற்ற அதிகாரிகளும் தான் உள்ளனர். விவசாயிகளுக்கு இடமில்லை. எனவே இந்த குழுவில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றனர். அப்போது பேசிய கலெக் டர், இந்த குழுவில் யார், யார் உள்ளார்கள் என்பது பரிசீலிக்கப்பபட்டு, விவசாயிகள் முழு அளவில் இடம் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். வேளாண் இணை இயக்குனர் பொன். காத்த பெருமாள் பேசுகையில், மாவட்டத்தில் விவசாயிகளுக்கான தொழில் நுட்ப கருத்தரங்கு மற்றும் கண்காட்சி மாவட்ட அளவில் நடத்த கலெக்டர் ரூ.2 லட்சம் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டு இருப்பதாக தெரிவித்தார். இதையடுத்து அனைத்து விவசாயிகளும் கலெக்டருக்கு நன்றி தெரிவித்தனர்.

## <u>கண்வலி கிழங்கு சாகுபடி விவசாயிகளுக்கு மானியம்</u>

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் கண்வலி கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகள் அரசு வழங்கும் மானியத்தை பெற்று பயன்பெறுமாறு கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார். அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: அரியலூர் மாவட்டத்தில் செந்துறை, தா.பழூர், ஜெயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடம் ஆகிய வட்டாரங்களில் ஏறத்தாழ 250 ஏக்கர் பரப்பளவில் கண் வலிக் கிழங்கு எனும் மூலிகைப்பயிர் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. கண்வலிக் கிழங்கு விதையில் இருந்து எடுக்கப்படும் கொலிச்சிசின் எனும் அல்கலாய்டு தற் போது அனைத்து வகை யான ஆயுர்வேத மற்றும் யுனானி முறை மருந்துகள் தயாரிக்க பயன்படுகிறது. அதிக மருத்துவ குணம் கொண்ட இப்பயிர் மிகவும் மென்மையான தண்டை கொண்ட கொடிவகையைச் சார்ந்தது ஆகும். இப்பயிரை ஒவ்வொரு வருடமும் பயிரிடுவதற்கும், பயிரிடும்போது புதிதாக ஊன்றுகோல் கட்டுவதற்கும், இப்பயிரின் மலர்களுக்கு செயற்கை மகரந்த சேர்க்கை செய்வதற்கும், தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத் திட்டத்தின்

கீழ் ஒரு ஹெக்டேருக்கு 50 சதவீதம் மானியமாக ரூ. 68 ஆயிரத்து 750 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்திற்கு 2014-15ம் ஆண்டுக்கு இத்திட்டத்தில் 100 ஹெக்டேருக்கு ரூ. 68 லட்சத்து 75 ஆயிரம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. எனவே, அரியலூர் மாவட்டத்தில் கண்வலிக் கிழங்கு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தின் கணினி சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், புகைப்படம் மற்றும் தேசிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முன்பக்க நகல் ஆகியவற்றுடன் தங்கள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு, தங்கள் பெயரை முன்பதிவு செய்து பயன் பெறுமாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## <u>செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 30 டன் சின்ன வெங்காயம் ரூ.5.42 லட்சத்திற்கு ஏலம்</u>

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 2 நாட்களில் 30 டன் சின்ன வெங்காயம் ரூ. 5.42 லட்சத்திற்கு ஏலம் மூலம் விற்பனை ஆனது என பெரம்பலூர் கலெக்டர் தெரிவித்துள்ளார். பெரம்பலூர் கலெக்டர் தரேஸ்அகமது ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது :பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளத்திலுள்ள வெங்காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் கடந்த, 18 மற்றும் 20 ஆகிய தேதிகளில் சின்ன வெங்காய திறந்த முறை ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில், இரூர், நாரணமங்கலம், மேட்டுப்பாளையம், எசனை, சிறுவயலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, நாட்டார்மங்கலம், மருதடி, வடக்குமாதவி, சிறுவாச்சூர், செட்டிக்குளம் மாவலிங்கை ஆகிய கிராமங்களைச்சேர்ந்த 136 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை கொண்டுவந்து விற்பனை செய்தனர். அரியலூர், செட்டிக்குளம், மங்கூன், சத்திரமனை, பொம்மனப்பாடி, பாடாலூர், திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய பகுதிகளைச்சேர்ந்த 26 வியாபாரிகள் 5,339 மூட்டைகள், அதாவது

30,369 கிலோ சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். புதிய வெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ. 31க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ. 18க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ரூ. 5,42,831 மதிப்பிற்கு சின்ன வெங்காயம் விற்பனை நடைபெற்றது. செட்டிக்குளம் வெங்காய வணிகவளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஏலம் நடைபெறும். விவசாயிகள் தங்களது வெங்காய விளைபொருளை அடுத்த ஏல நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்திற்கு நேரில் கொண்டுவந்து, திறந்தமுறை ஏலத்தின்மூலம் விற்பனைசெய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என பெரம்பலூர் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## நடப்பு நிதியாண்டில் 895 எக்டேரில் விதைப்பண்ணை பதிவு

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் நடப்பு நிதி யாண்டில் 895 எக்டாரில் விதைப்பண்ணை பதிவு மேற் கொள்ளப்பட்டுள்ளதாக விதைச்சான்று துறை இயக்குனர் தெரிவித்தார். திருச்சி மாவட்டத்தில் நடப்பு சம்பா சாகுபடி பணி கள் முனைப்புடன் நடந்து வரும் தருணத்தில் கோவை விதைச்சான்று துறை இயக் குனர் ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்தார். அப்போது விதைச்சான்று உதவி இயக்குனர் அலுவலக ஆய் வின்போது விதைச்சான்று அலுவலர்கள் விதை பண்ணை பதிவு மற்றும் விதைச்சான்று பணிகளில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பிரிவி லும் இலக்கை அடைந்தாலும் கூட விதைப்பண்ணை பதிவு பணியை தொடர வேண்டும். விதைச்சான்று அலுவலர்கள் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி கொள்ள வேண் டும். ஒவ்வொரு நெல் ரகத் துக்கான தனித்துவங்களை பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமென அறிவுரை வழங்கினார். இதைதொடர்ந்து ராதாகிருஷ்ணன் கூறுகை யில், திருச்சி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் இது வரை 895 எக்டேரில் விதைப்பண்ணை பதிவு மேற் கொள்ளப்பட்டுள்ளது. 1,155 மெ.டன் விதை சான்று செய்யப்பட்டுள்ளது.

இலக் குக்கு குறைவின்றி நடப்பு சம்பா பருவத்தில் சாதனை செய்ய கேட்டு கொள்ளப்பட் டுள்ளது என்றார். முன்னதாக முசிறி விதை சுத்திகரிப்பு நிலையத்தில் ஆய்வு செய்தார். அப்போது சிறுதானிய பயிர்களான கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, வரகு உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் அதிக பரப்பில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கு மாறு சம் பந்தப்பட்ட துறை அலு வலர் களுக்கு அறிவுரை வழங்கி னார். ஆய்வின்போது திருச்சி விதைச்சான்று உதவி இயக் குனர் எழில் அரசு, விதை பரி சோதனை அலுவலர் ரவி, விதை சான்று அலுவலர் கோவிந்தராஜ் உடனிருந் தனர்.

## வனாமி இறால் வளர்த்தால் குறைந்த காலத்தில் அதிக லாபம் கருத்தரங்கில் விவசாயிகளுக்கு யோசனை

தஞ்சை, : வனாமி இறால் வளர்ப்பதன் மூலம் குறைந்த காலத்தில் அதிக லாபம் ஈட்ட முடியும் என தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் தெரிவித்தார். குறை உவர் நீர் பண்ணைக்குட்டைகளில் வனாமி இறால் வளர்ப்பு குறித்த கருத்தரங்கு தஞ்சையில் நடைபெற்றது. நாகை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் ரத்னகுமார் வரவேற்றார். துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் தலைமை வகித்து பேசுகையில், இயற்கை இடர்பாடுகள் மற்றும் காவிரி நீர் பிரச்னையால் வேளாண் சாகுபடிகள் பல்வேறு நிலைகளில் தோல்வியை சந்தித்து வருகிறது. இதற்காக விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கக்கூடாது என்பதற்காக அரசு ஆடு, மாடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கெண்டை மீன் வளர்ப்பு அதிக அளவில் உள்ளது. ஆனால் 10 மாதங்கள் கழித்து தான் இவை வளர்ச்சி பெற்று விற்பனை செய்ய முடியும் என்பதால் இதில் சில சமயங்களில் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால் குறைந்த காலத்தில் அதிக லாபம் ஈட்டும் வனாமி இறால் வளர்ப்பு முறையை தற்போது மேற்கொண்டால் அதிக லாபம் ஈட்ட முடியும. குறைந்தது 70 நாளில் இறால் வளர்ச்சி பெற்று

அறுவடைக்கு தயாராகிவிடுவது தான் இதற்கு காரணம். 8 கிராம், 10 கிராம் அளவில் கூட இவற்றை விற்பனை செய்ய முடியும். இறால் உப்பு நீரில் தான் வளர்க்க வேண் டும் என்றில்லை. நல்ல நீரிலும் வளர்க்க முடியும். எனவே வனாமி இறால் வளர்த்து அதிக லாபம் ஈட்ட முன் வரவேண்டும் என்றார். தமிழ்நாடு மீன்வளத்துறை மண்டல இணை இயக்குனர் சுப்புராஜ், மாவட்ட நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் சுப்ரமணியன், ஐ.ஓ.பி. முதன்மை மேலாளர் ராஜா ருக்மாங்கதன், தமிழ்நாடு மீன் வளர்ப்பு விவசாயிகள் நலச்சங்கம் மாநில இணை செயலாளர் பரமசிவம் வாழ்த்தி பேசினர்.

## நவ.28ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மதுரை, : மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 28ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. கலெக்டர் சுப்பிரமணியன் தலைமை வகித்து விவசாயிகளிடம் மனுக்களை பெறுகிறார். இக்கூட்டத்தில் விவசாயம் சார்ந்த அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். எனவே விவசாயிகள் தங்களது பிரச்னைகள் குறித்து நேரில் தெரிவிக்கலாம். அல்லது கோரிக்கைகளை மனுக்களாக வழங்கலாம் என வேளாண்மை அலுவலர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## தொடர் கனமழையால் துவரங்காடு வெள்ளி அருவி தடுப்பணையில் வெள்ளப்பெருக்கு

சுரண்டை, : தொடர் கனமழையால் துவரங்காடு வெள்ளி அருவி தடுப்பணையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. சுரண்டை அதன் சுற்று பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக மழை பெய்ந்து கொண்டிருக் கிறது, இந்நிலையில் 50க்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பி மறுகால் விழுகிறது. சிற்றாறு, மானூர், மாறாந்தை கால்வாய்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தற்போது விவசாயிகள் நெல்சாகுபடி பணியை

தொடங்கிவிட்டனர். மேற்கு தொடர்ச்சி மலை யில் கனமழை பெய்வதால் சுரண்டை அருகே உள்ள துவரங்காடு வெள்ளி அருவி தடுப்பணையில் வெள்ளம் நிரம்பி தாண்டி விழுகிறது. இந்த தடுப்பணை அமைத்து சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 15 அடி உயரம், 400 அடி நீளம் கொண்ட இதன் தடுப்புச்சுவர் சிறு சிறு துளை விழுந்து உள்ள தால் அதன் வழியாக தண் ணீர் வெளியேறுகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் குறைந்து விடு கிறது. மேலும் விவசாய பணி கள், குடிநீருக்கும் கோடை காலங்களில் கடும் பாதிப்பு ஏற்படுகிறது. வெள்ளி அருவி தடுப்பணையில் இருந்து பிரிந்து சிற்றாறு மற்றம் மாறாந்தை கால்வா யாக செல்கிறது. இதை நம்பி பல ஆயிரக்கணக் கான விவசாயிகள் விவசா யம் செய்து வருகின்றனர். இதுகுறித்து கீழ வெள்ள கால் ஊராட்சி தலைவர் ராமாத்தாள் முத்தையாச் சாமி கூறுகையில், முழுசுகாதார பணியில் ஊராட் சிக்கு ஜனாதிபதி, தமிழக முதல்வர் ஆகியோ ரால் விருது பெற்ற கிராமம் ஆகும். வெள்ளி அருவி தடுப்பணையில் கோடை கால மழை, சாரல் மழை காலங்களில் அணை தண் ணீர் நிரம்பி வெளியேறும். தடுப்பணை நிரம்பும் காலங்களில் அப்பகுதியை சுற்றியுள்ள கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகள் பொதுமக்கள் அங்கு வருகின்றனர். தடுப்பணை மற் றும் இயற்கை காட்சிகளை ரசிக்கிறார்கள். இங்கிருந்து 15 கிலோ மீட்டர் தூரம் குற் றாலம் உள்ளது. ஏற்கனவே கலெக்டர் தடுப்பணையை பார்வையிட்டு, இயற்கை காட்சியை பார்த்து, சுற் றுலா பயணிகளுக்கு படகுசவாரி அமைக்கவும், சுற் றுலா தலம் அமைக்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்வதாக அறிவித்தார். மேலும் தடுப்பணையின் பக்கவாட்டு சுவர் சிறு, சிறு துளை வழியாக நீர் வடிவ தால் பொதுப்பணிதுறை அதிகாரிகள் சீரமைக்க வேண்டும் என் றார்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க ரூ.255 கோடி இலக்கு நிர்ணயம்

கடலூர், கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடப்பு ஆண்டில் (2014-2015) விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க ரூ.255 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக கடலூரில் நடந்த கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் எம்.சி.சம்பத் கூறினார். கூட்டுறவு வார விழா கடலூர் மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில் 61-வது அனைத்திந்திய கூட்டுறவு வார நிறைவு விழா கடலூர் டவுன்ஹாலில் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தலைமையில் நடந்தது. கடலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் பெருமாள்ராஜா வரவேற்றார். அருண்மொழிதேவன் எம்.பி., மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவரும், நகரசபை தலைவருமான குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ரேணுகாம்பாள் திட்ட விளக்கவுரை யாற்றினார். விழாவில் சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் எம்.சி.சம்பத் கலந்து கொண்டு அரசின் நலத்திட்ட உதவிகள், 19 சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயம், ஓவியம், கட்டுரை, பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ- மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார். அப்போது அவர் கூறியதாவது:- ரூ.255 கோடி இலக்கு கூட்டுறவுத்துறை அனைத்து தரப்பு மக்களுக்கும் தலை சிறந்த சேவையை செய்து வருகிறது. விலைவாசி உயர்ந்தாலும் மக்களுக்கு எண்ணற்ற சேவைகளை தமிழக அரசு செய்து வருகிறது. கடலூர் மாவட்டம், தானே புயலால் பாதிக்கப்பட்ட போது, விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை உடனடியாக வழங்கியவர் ஜெயலலிதா. கடலூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 272 கூட்டுறவு சங்கங்கள் மூலம் 2014-2015-ம் ஆண்டுக்கு

விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க ரூ.255 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு தற்போது வரை 29 ஆயிரத்து 49 விவசாய உறுப்பினர்களுக்கு ரூ.175 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நகைக்கடன் இதில் உரிய காலத்தில் திருப்பி செலுத்திய 6 ஆயிரத்து 455 உறுப்பினர்களுக்கு 2013-14-ல் ரூ.1 கோடியே 19 லட்சம் மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. முதலீட்டு கடனாக இந்த ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.17 கோடி இலக்கில் அக்டோபர் 2014 வரை 1181 உறுப்பினர்களுக்கு ரூ.8 கோடி அளவுக்கு முதலீட்டு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. நகைக்கடன் ரூ.1137 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடந்த மாதம் வரை 1 லட்சத்து 13 ஆயிரத்து 626 பேருக்கு ரூ.449 கோடியும், சுயஉதவிக்குழு கடனாக கடந்த மாதம் வரை 609 குழுக்களுக்கு ரூ.6 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதன் இலக்கு ரூ.23 கோடி.

அம்மாமருந்தகம்

தானிய ஈட்டுக்கடன் வழங்க ரூ.13 கோடியே 50 லட்சம் நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 150 உறுப்பினர்களுக்கு ரூ.2 கோடியே 89 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் உதவி, மகளிர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு பங்கு மூலதன நிதிஉதவி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மக்களின் நலன் காக்க தரமான மருந்துகளை 12 சதவீத தள்ளுபடி விலையில் விற்பனை செய்திட கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், நெய்வேலி, விருத்தாசலம் பகுதிகளில் 10 அம்மா மருந்தகங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விலையில்லாஅரிசி

பொது விநியோக திட்டத்தின் கீழ் 5 லட்சத்து 88 ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் 12 கிலோ முதல் 20 கிலோ வரை விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இதில் இந்த ஆட்சியில் 39

ரேஷன்கடைகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளிலும், நிறுவனங்களிலும் பணியாற்றும் பணியாளர்களின் நலனுக்காக 77 பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் செயல்படுகின்றன. இச்சங்கங்களின் 52 ஆயிரத்து 925 உறுப்பினர்களுக்கு நடப்பு ஆண்டில் ரூ.202 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே பணியாளர்கள் கூட்டுறவு வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும். ரேஷன் கடை பணியாளர்கள் பொதுமக்களுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். இவ்வாறு அமைச்சர் எம்.சி.சம்பத்பேசினார்.

நலத்திட்டஉதவிகள்

முன்னதாக விழாவில் 197 பயனாளிகளுக்கு ரூ.2½ கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் எம்.சி.சம்பத் வழங்கினார். பின்னர் கூட்டுறவு துறை கண்காட்சியையும் அவர் பார்வையிட்டார். விழாவில் சந்திரகாசி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் சொரத்தூர் ராஜேந்திரன், எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், செல்விராமஜெயம், முருகுமாறன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மல்லிகா வைத்திலிங்கம், ஒன்றியக்குழு தலைவர் மணிமேகலை பழனிச்சாமி, நகரசபை துணை தலைவர் சேவல்குமார், மாவட்ட சரவணபவ நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தலைவர் கே.எஸ்.கே. பாலமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் கூட்டுறவு வீடு கட்டும் சங்க தலைவர் ரவிச்சந்திரன், துணை பதிவாளர்கள் நடராஜன், ராஜேந்திரன், பாலசுந்தரம், ஜெயசந்தர், உதவி இயக்குனர் கிரிதரன், கவுன்சிலர்கள் பாலகிருஷ்ணன், ஆர்.வி.மணி, திட்டக்குழு உறுப்பினர் கந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் துணை பதிவாளர் கணேசன் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு தேவையான உரம் கையிருப்பில் உள்ளது**
**குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் தகவல்**



குமரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரம் கையிருப்பில் உள்ளது என்று கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் கூறினார்.
குறைதீர்க்கும்கூட்டம்
குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் தலைமை தாங்கி, விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார். அதைத்தொடர்ந்து கடந்த மாத கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு பதில் அளிக்கப்பட்டது. அப்போது அதிகாரிகள் தரப்பில் அளிக்கப்பட்ட பதில்கள்வருமாறு:-
மழை காரணமாக கால்வாய்களில் விழுந்த மண் அகற்றப்பட்டு அனைத்து கால்வாய்களிலும் தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. விவசாய குழுக்களுக்கு சுழல் நிதி வழங்க வேளாண்மைத்துறையில் நிதி ஒதுக்கீடு இல்லை. விவசாய குழுக்கள் கடன்பெற வங்கியை தொடர்புகொள்ளலாம். எந்திரம் மூலம் இயங்கும் தென்னை மரம் ஏறும் கருவி குறித்து கேரள மாநிலம் திருச்சூரில் இக்கருவியை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தை தொடர்பு கொள்ளப்பட்டது. அந்த கருவி இன்னும் வணிகரீதியாக விவசாயிகள் பயன்பாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. எந்திரத்தின் எடையை குறைக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. எனவே தரக்கட்டுப்பாடு சான்றுடன் பயன்பாட்டுக்கு வரும் பட்சத்தில் இம்மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்படும்.

சுற்றுலாத்தலம்

தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் புதிய நான்குவழி சாலை அமைப்பதற்காக கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு தேசிய நெடுஞ்சாலைச் சட்டத்தின்படி உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நான்கு வழிச்சாலை அமைக்கப்படும்போது குளங்கள் மற்றும் வாய்க்கால் முதலான நீர்ப்பாசன இனங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். தேங்காப்பட்டணத்தில் மீன்பிடி துறைமுகம் அமைவதால் அங்கு எவ்வித சுற்றுலா மேம்பாடு பணிகளும் செய்ய இயலாது. முட்டம் கடற்கரை பகுதியில் ஏற்கனவே ரூ.1 கோடியில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முட்டம் ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் போதிய பராமரிப்பு இல்லாமல் பயனற்ற நிலையில் இருந்தது. தற்போது புனரமைக்கும் பணிக்காக ரூ.30.12 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் மத்திய அரசு கலங்கரை விளக்கத்துறைக்கு சம்பந்தப்பட்ட இடம் சொந்தமானது என தெரிவித்துள்ளதால் பணி நிறுத்தப்பட்டுள்ளது. உழவர் அட்டை அரசிடமிருந்து அச்சடித்து வந்ததும் உடனடியாக பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

குளம்யார்வசம்?

தேரூர் குளம், சுசீந்திரம் குளம், மாணிக்க புத்தேரி குளங்களுக்கு பறவைகள் வந்து செல்வதற்கு ஏற்ற வகையில் வனத்துறையினர் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். ஆனால் மேற்கண்ட குளங்கள் பொதுப்பணித்துறை வசம்தான் இருந்து வருகிறது. மீன்வளர்ப்புக்காக குத்தகைக்கு விடப்பட்டுள்ள குளங்களும் பொதுப்பணித்துறை வசம்தான் உள்ளது. இவ்வாறு விவசாயிகளின் கேள்விகள், கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

உரம்இருப்பு

குமரி மாவட்ட பாசன சங்கத்தலைவர் வின்ஸ் ஆன்றோ பேசும்போது,

“முளகுமூடு பேரூராட்சி குழிக்கோடு பகுதியில் கால்வாயை நிரப்பி அமைக்கப்பட்ட சாலையின் ஓரமாக மீண்டும் கால்வாய் வெட்டப்பட்டது. இதற்கு பக்கச்சுவர் கட்டுவதற்கான கோப்பு முளகுமூடு பேரூராட்சியில் இருந்து அனுப்பப்பட்டு பேரூராட்சிகள் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது. இதற்கான அனுமதியை வழங்கி உடனடியாக பணியை தொடங்க வேண்டும்” என்றார். இதேபோல் விவசாயிகள் பலர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் பேசும்போது, “குமரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரம் கையிருப்பில் உள்ளது. 1385 மெட்ரிக் டன் யூரியா உரம் இருப்பில் உள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் கூடுதலான அளவுக்கு உரம் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. டி.ஏ.பி., பொட்டாஷ், சூப்பர் பாஸ்பேட் உரங்களும் போதுமான அளவுக்கு இருப்பில் உள்ளன” என்றார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி உதயகுமார், வேளாண்மைத்துறை இணை இயக்குனர் பொன்காத்த பெருமாள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன், புலவர் செல்லப்பா, மருங்கூர் செல்லப்பா மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## <u>மானிய விலையில் வேளாண்மை கருவிகள், சூரிய ஒளி குடில்</u>

கிருஷ்ணகிரி மாவட் டத்தை சேர்ந்த விவ சாயிகளுக்கு மானிய விலையில் வேளாண்மை கருவிகள் மற்றும் சூரிய ஒளி குடில் அமைத்துக் கொடுக்கப் படும் என்று கிருஷ்ணகிரி வேளாண்மை பொறி யியல் துறை செயற் பொறியாளர் வேணு கோபால் தெரிவித்துள் ளார். இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

வேளாண்மைகருவிகள்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வேளாண்மை எந்திரம் மற்றும் கருவிகள் வாங்க மானியம் வழங்கப்படு கிறது. அதன்படி சிறு, குறு விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி பிரிவை சேர்ந்த விவசாயிகளுக்கு

அதிகபட்சமாக 50 சதவீதம் வரை மானியமாகவும், பிற விவசாயிகளுக்கு அதிகபட்ச மாக 40 சதவீதம் வரை மானியமும் வழங்கப்படவுள் ளது. பலவகை தானிய கதிர் அடிக்கும் எந்திரம், களை யெடுக்கும் எந்திரம் (8 எச்.பி.க்குள்), விசைத் தெளிப்பான், பவர் டில்லர், உழுவை கருவி கள், நெல் நடவு எந்திரம், சுழற் கலப்பை, தீவனப் புல் வெட்டும் கருவி, மரம் அறுக் கும் கருவி, பிற வேளாண்மைக் கருவிகளுக்கு இந்த மானியம் வழங்கப்படும்.

சூரியஒளிகுடில்

இதேபோல் சூரிய ஒளி மூலம் பழங்கள் மற்றும் காய்கறிகளை உலர செய்து, அவற்றின் உபயோகப்படுத்தும் கால அளவை அதிகரிக்கச் செய்து, மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, விவசாயி களின் வருமானத்தை பெருக்க வழிவகை செய்யப்படும். இத் திட்டத்தில் பாலி கார்பனேட் மூலம் குடில் அமைக்கப்படு கிறது. இதில் வாழைப்பழம், தக்காளி மற்றும் பல்வேறு வகையான பழங்கள் மற்றும் காய்கறிகள் உலர்த்தப்படு கிறது. இந்த குடில் தேவைப் படும் விவசாயிகளின் நிலத்தில் 400 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படுகிறது. இதற் கான செலவு ரூ. 4 லட்சமாகும். இதில் 50 சதவீதம் அதாவது ரூ. 2 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் பெயர் மற்றும் முகவரி, சர்வே எண், சிட்டா அடங்கல் ஆகியவற்று டன் விண்ணப்பிக்கலாம். மேலும் இத்திட்டங்கள் தொடர்பாக விவரம் பெறவும் மற்றும் விண்ணப்பிக்கவும் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி தாலுகாக் களை சேர்ந்தவர்கள் உதவி பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 43 செட்டி யம்பட்டி சாலை, அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி என்ற முகவரியிலும், ஓசூர், தேன் கனிக்கோட்டை தாலுகாக் களை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, ராயக்கோட்டை

சாலை, சென்னசந்திரம், ஓசூர் என்ற முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

## சேலம் ஆலைகளில் உற்பத்தி தொடங்கியது: 3 மாதங்களுக்கு பிறகு கூடிய சந்தையில் ரூ.50 லட்சத்திற்கு வெல்லம் ஏலம்



சேலம் சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஆலைகளில் உற்பத்தி தொடங்கியதையடுத்து சேலத்தில் 3 மாதங்களுக்கு முன்பு நேற்று கூடிய சந்தையில் ரூ.50 லட்சத்திற்கு வெல்லம் ஏலம் போனது. இதில் வெளியூர் வியாபாரிகள் திரளாக பங்கேற்று போட்டி போட்டு வெல்லத்தை கொள்முதல்செய்தனர்.

கலப்படம்வெல்லம்

சேலம் மாவட்டத்தில் ஓமலூர், தேக்கம்பட்டி, மூங்கில்பாடி, வட்டக்காடு, கருப்பூர், காமலாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 100-க்கும் மேற்பட்ட வெல்ல உற்பத்தியாளர்கள் உள்ளனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் வெல்லத்தை அதன் உற்பத்தியாளர்கள், செவ்வாய்பேட்டை வெல்ல மண்டிக்கு கொண்டு வந்து ஏலத்தில் விற்பனை செய்வது வழக்கம். கடந்த சில மாதங்களுக்கு முன்பு உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள், செவ்வாய்பேட்டை வெல்ல வியாபார கடைகளில் திடீர் ஆய்வு நடத்தியபோது, கலப்படம் வெல்லம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. வெல்லத்தில் சர்க்கரை, ரசாயனம் போன்ற கலப்படம் செய்திருப்பது உறுதிசெய்யப்பட்டதை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் உள்ள வெல்லம் உற்பத்தி செய்யும் ஆலைகளில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது ஒருசில ஆலைக்கு சீல் வைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து

மாவட்டம் முழுவதும் வெல்லம் தயாரிப்பு அடியோடு நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 10 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பை இழக்கும் சூழ்நிலை உருவானது. உற்பத்தி தொடங்கியது. இந்தநிலையில், கடந்த 3 மாதங்களாக நடைபெறாமல் இருந்த வெல்லம் உற்பத்தி தற்போது அனைத்து ஆலைகளிலும் மீண்டும் தொடங்கி யுள்ளது. அதாவது உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் ஆலோசனைபேரில் கலப்படம் செய்யாமல் கரும்புச்சாறு மட்டுமே பயன்படுத்தி வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி செவ்வாய்பேட்டை வெல்ல சந்தையில் கடந்த 3 மாதங்களாக நடைபெறாமல் இருந்த வெல்லம் ஏலம் நேற்று முதல் தொடங்கியது. இதற்காக சுமார் 100 வெல்ல உற்பத்தியாளர்கள் 5 ஆயிரம் சிப்பம் வெல்லத்தை கொண்டு வந்திருந்தனர். ஒரு சிப்பம் 30 கிலோ எடை கொண்டது. இந்த ஏலத்தில் சென்னை, மதுரை, நாமக்கல், கரூர் உள்ளிட்ட வெளி மாவட்டங்களில் இருந்து வந்திருந்த ஏராளமான வியாபாரிகள் போட்டி போட்டு ரகம் வாரியாக வெல்லத்தை கொள்முதல் செய்தனர். ரூ.50 லட்சத்திற்கு ஏலம் 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் வெல்லம் ரூ.1,000 முதல் 1,200 வரைக்கும் ஏலம் போனது. மொத்தம் 5 ஆயிரம் சிப்பம் வெல்லம் சுமார் ரூ.50 லட்சத்திற்கு மேல் நேற்று ஒரேநாளில் ஏலம் போனது. இது குறித்து சேலம் மாவட்ட கரும்பு வெல்லம் உற்பத்தியாளர்கள் விவசாயிகள் சங்கத்தின் செயலாளர் ரமேஷ்குமார் கூறுகையில், சர்க்கரை பாபு, சூப்பர் பாஸ்பேட், சப்போலேட், ஹைட்ரோசன், சோடா உப்பு உள்ளிட்ட ரசாயனம் கலப்படம் செய்யாமல் கரும்புச்சாறு பயன்படுத்தி வெல்லத்தை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளோம். கடந்த 3 மாதங்களாக நடக்காமல் இருந்து வெல்லம் ஏலம் தற்போது தொடங்கியுள்ளது. சேலம் வெல்லம் மண்டியில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய 3 நாட்கள் மட்டும் ஏலம் நடக்கும். அந்தவகையில் இன்று (அதாவது நேற்று) வழக்கம்போல் வெல்லம்

மண்டியில் வெல்லம் ஏலம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு சிப்பம் மீது வெல்லத்தை உற்பத்தி செய்த நபர்கள் யார்? என்றும், அவர்களின் விலாசமும் இடம்பெறும் வகையில் பார்வைக்கு வைக்கப்படும். இனிமேல் கலப்பட வெல்லம் வருவதற்கு வாய்ப்பு இருக்காது. இவ்வாறு அவர் கூறினார். சேலம் மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களாக நீடித்து வந்த வெல்லம் உற்பத்தியாளர்கள் பிரச்சினை தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

## சம்பா பருவத்திற்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தகவல்



கலசபாக்கம்

சம்பா பருவத்திற்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கூறினார்.

### அமைச்சர் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியம் மல்லவாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள உரக்கிடங்கில் வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆய்வுசெய்தார். இந்த ஆய்வின் போது கலெக்டர் அ.ஞானசேகரன் உடனிருந்தார். பின்னர் அமைச்சர்அக்ரி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:–

### தட்டுப்பாடின்றி

தமிழக விவசாயிகளுக்கு சம்பா பருவத்திற்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி சரியான நேரத்தில், சரியான விலையில், சரியான அளவில் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளது. அதற்காக 1 லட்சத்து 60 ஆயிரம் டன் உரங்கள் தயார் நிலையில்

உள்ளது. தமிழகத்திற்கு தேவையான யூரியா உரங்கள் மற்றும் சம்பா பருவத்திற்கு விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தடையின்றி கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது, இந்த மாதத்திற்கு மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய 1 லட்சத்து 60 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் யூரியா உரங்களில் தற்போது 81 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்கள் ரெயில் மூலம் வந்துள்ளது.

மானியம் நிறுத்தம்

குறிப்பாக ஜெயலலிதாவின் வழிகாட்டுதலோடு டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு தங்குதடையின்றி யூரியா உரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு கூட்டுறவு நிறுவனமான இப்கோ மற்றும் கிரிப்கோ நிறுவனங்கள் மூலமாக தமிழக விவசா யிகளுக்கு சுமார் 4 ஆயிரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலமாக 60 சதவீத உரங்கள், யூரியா வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 40 சதவீத உரங்கள் தனியார் நிறுவனங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. தமிழகத்தில் செயல்பட்டு வந்த ஸ்பிக் மற்றும் சென்னை உர நிறுவனங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்காத காரணத்தால் அந்த நிறுவனங்கள் தற்போது உர உற்பத்தியை நிறுத்தி உள்ளன.

செயற்கை தட்டுப்பாடு

இந்த இரண்டு நிறுவனங்களும் நாப்தா மூலம் யூரியா உற்பத்தி செய்வதற்கு மானியம் வழங்க வேண்டும் என்று பிரதமருக்கு மக்களின் முதல்வர் கடிதம் மூலமாக தொடர்ந்து வலியுறுத்தியதின் அடிப்படையில் சில காலம் மானியத்தை வழங்கிய மத்திய அரசு பின்னர் வழங்க முடியாது என தெரிவித்துவிட்டது. தமிழ்நாட்டிற்கு தேவையான 60 சதவீத உர தேவையை இந்த இரண்டு நிறுவனங்கள் மட்டுமே வழங்கி வந்தன. தற்போது இந்த செயற்கையான முறையில் ஏற்பட்டுள்ள உர தட்டுப் பாட்டிற்கு காரணம் மத்திய அரசு இரண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படாததே காரணம். இந்த நிறுவனங்கள் நாப்தா வாயு மூலமாகவும் இயற்கை எரிவாயு மூலமாக யூரியா உற்பத்தி செய்கின்ற வரை தொடர்ந்து மானியம் வழங்க வேண்டுமென மத்திய அரசை

ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். இந்த மானியத்தை மத்திய அரசு மீண்டும் வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

<u>கடுமையான நடவடிக்கை</u>

அதிக விலைக்கு விற்றாலும் தவறு செய்தாலும் இந்த விஷயத்தில் ஜெயலலிதா அறிவுரையின்படி அவர்கள் மீது உரக்கட்டுப்பட்டு விதியின்கீழ், சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நட வடிக்கைகள் வேளாண்மைத் துறை அதிகாரிகள் மூலமாக எடுக்கப்படும். தற்போது அதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார். ஆய்வின்போது ஏ.கே.அரங்கநாதன் எம்.எல்.ஏ. உள்பட பலர் உடன் இருந்தனர்.